https://puthusudar.lk/
puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

18th AUGUST 2024 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 93





# சஜித் தரப்பு எம்பிக்களுக்கு தொடர்ந்து வலை

சஜித் தரப்பு எம்பிக்கள் 13 பேர் இதுவரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்துள்ளனர். இருந்தும் மேலும் பல எம்பிக்களுக்கு ஜனாதிபதி தரப்பு வலைவீசி வருவதாக அறிய முடிகிறது.

சில எம்பிக்கள் ரணிலுடன் இணைவதற்கு விருப்பம் கொண்டுள்ளபோதிலும், ரணில் தோல்வியடைந்துவிட்டால் சிக்கலாகிவிடும் என்ற அச்சத்தில் மதில் மேல் பூனையாக இருக்கின்றனர் என்று ஜனாதிபதி தரப்பில் இருந்து அறிய முடிகிறது.

தேர்தலின் இறுதிக் கட்டத்தில் வெற்றி யார் பக்கம் இருக்கிறதோ அந்தப் பக்கமே சாய்வார்கள் என்று அந்தத் தகவல்கள் மேலும் கூறுகின்றன.

இதேவேளை, சஜித்

02

## கள்ளக்காதலியால் அச்சுறுத்தல்: பாதுகாப்பு கோரும் ஜனாதிபதி வேட்பாளர்

தனது கள்ளக்காதலியால் தனக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்றும் அதில் இருந்து தப்புவதற்காக தனக்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் பொலிஸிடம் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

பிரதான வேட்பாளர்களான ரணில் விக்ரமசிங்க,சஜித் பிரேமதாசா ,அனுரகுமார திஸாநாயக்க,நாமல் ராஜபக்ச,விஜயதாச ராஜபக்ச மற்றும் திலித் ஜயவீர உள்ளிட்ட பிரதான வேட்பாளர்களுக்கு பாதுகாப்பது அதிகரிக்கப்படும் என்றும் பொலிஸ் தகவல்கள் மேலும் கூறுகின்ற்ன.

## அச்சுறுத்தல் உள்ள வேட்பாளர்களுக்கு அதிக பாதுகாப்பு



ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு இருக்கின்ற அச்சுறுத்தல்கள் தொடர்பில் அரச புலனாய்வு பிரிவு உயர்மட்ட ஆய்வொன்றை செய்து வருகிறது என்றும் அதன் அடிப்படையில் அச்சுறுத்தல் அதிகமாக இருக்கின்ற வேட்பாளர்களின் பாதுகாப்பு அதிகரிக்கப்படும் என்றும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் தலைமையில் அமைச்சரவையின் அனுமதியோடு இது தொடர்பில் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவே பாதுகாப்பு அதிகரிப்பு தொடர்பில் இறுதி முடிவெடுக்கும்.



## தேர்தல் செலவுகளுக்கு கட்டுப்பாடு

தேர்தல் செலவுகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் புதிய நடைமுறை ஒன்றை தேர்தல்கள் ஆணைக்குழு நடைமுறைப்படுத்தவுள்ளது.

அடுத்த வாரம் அனைத்து ஜனாதிபதி வேட்பாளர்களையும் அழைத்து தேர்தல் செலவுகள் எப்படி இருக்க வேண்டும் என்று ஆணைக்குழு அவர்களுக்கு விளக்கம் கொடுக்கவுள்ளது.

மேலும்,தேர்தல் முடிந்து 21 நாட்களுக்குள் ஒவ்வொரு வேட்பாளரும் செலவழித்த செலவு விபரங்களை

02



புதுசுடர்
www.puthusudar.lk
2024 AUGUST 18 - SUNDAY

# சிந்தித்து வாக்களியுங்கள்

பல சந்தேகங்களின் மத்தியில் இப்போது ஜனாதிபதி தேர்தல் தொடங்கிவிட்டது.

தேர்தலை ஒத்திப்போடுவதற்காக ஜனாதிபதி நகர்த்திய அத்தனை காய்களும் வீண் என்றே சொல்ல வேண்டும்.

ஏனைய தேர்தல்களை விடவும் இந்தத் தேர்தல் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது. மக்களால் அதிகம் எதிர்பார்க்கப்பட்டது.

அதற்கு காரணம் பொருளாதார நிலைமைதான். மிகுந்த எதிர்பார்ப்புடன் 2019இல் கோத்தாபாய ராஜபக்சவை ஜனாதிபதி யாக்கினார்கள் மக்கள்.

எல்லாமே வெகு சீக்கிரத்திலேயே பிழைத்துப் போயின. நாட்டு மக்களை முற்றாக ஏமாற்றிவிட்டு அனைவரையும் பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளினார்.

தாம் அவசரப்பட்டு - இனவாத பிரசாரத்துக்குள் சிக்கி திறமையற்ற ஒருவரை ஜனாதிபதியாக்கிவிட்டோம் என்று எண்ணி மக்கள் வருந்தினர்.

இதனால் பொங்கி எழுந்து அவரை விரட்டியடித்தனர்.

இரண்டு வருடங்களில் அவரது ஆட்சி முடிவுக்கு வந்தது.

அவரது மிகுதி காலத்துக்கு ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றத்தால் மொட்டு கட்சியின் ஆதரவுடன் ஜனாதிபதியாக்கப்பட்டார்.

அப்போது மொட்டு கட்சிக்கு நாட்டு மக்களால் ஏற்பட்ட அச்சுத்தலில் இருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் நோக்கிலேயே ரணிலை அவர்கள் ஜனாதிபதியாக நியமித்தனர்.

அந்தப் பணியை ரணில் கச்சிதமாகச் செய்தார். மொட்டு கட்சியினதும் ராஜபக்ச குடும்பத்தினதும் பாதுகாப்பை நூறு வீதம் உறுதிப்படுத்தினார்.

மக்களை சாந்தப்படுத்துவதற்காக அப்போது இருந்த பெரிய பிரச்சினையான எரிபொருள் மற்றும் மின்சார பிரச்சினையைத் தீர்த்து வைத்தார்.

இதனால் மக்களின் கோபம் சற்றுத் தனியத் தொடங்கியது. ஆனால், மறுபுறம் மக்கள் இறுகத் தொடங்கினர். ரணில் சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவியைப் பெறுவதற்காக அந்த நிதியம் விதித்த கடுமையான நிபந்தனைகளை அப்படியே ஏற்று அமுல்படுத்தத் தொடங்கினார்.

இதனால் பல வரிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதனால் பொருட்களின் விலைகள் தாறுமாறாக ஏறி மின் கட்டணமும் அதிகரிக்கப்பட்டது.

மின் கட்டண அதிகரிப்பால் கட்டணத்தை செலுத்த முடியாமல் மக்கள் திண்டாடினர். இப்போதும் திண்டாடுகிறார்கள்.

லட்சக்கணக்கான இணைப்புகள் துண்டிக்கப்பட்டன.

மறுபுறம், ஊதிய வரி அறிமுகத்தால் வைத்தியர்கள் உள்ளிட்ட தொழில் நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறத் தொடங்கினர்.

இன்னும் மக்கள் அதே கஷ்ட நிலையில்தான் உள்ளனர். பொருட்களின் விலை அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. குறையவே இல்லை.

எரிபொருளையும் மின்சாரத்தையும் பெற்றுக்கொடுத்துவிட்டு பொருளாதார பிரச்சினையைத் தீர்த்துவிட்டோம் என்று சொல்கிறது அரசு.

இப்படியானதொரு நிலையில்தான் இப்போது ஜனாதிபதி தேர்தல் வந்திருக்கிறது.

இந்தத் தேர்தலில் இனவாதம் எடுபடாது. நாட்டைக் கட்டியெழுப்பும் - மக்களின் வாழ்வை முன்னேற்றும் சரியான பொருளாதார கொள்கையே எடுபடும்.

உண்மையில், இதை அடிப்படையாக வைத்தே யாருக்கு வாக்களிப்பது என்று மக்கள் முடிவெடுக்க வேண்டும். அதுவே சரியான முடிவாக அமையும்.

## சஜித்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

**வெற்றிபெறுவார் என்று நம்புகின்ற ஜனாதிபதி தரப்பு எம்பிக்கள் சிலர் சஜித்தின் பக்கம் பாய்வதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன என்றும் தகவல்கள் கூறுகின்றன.**

## தேர்தல்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

ஜனாதிபதி தேர்தலில் இந்தத் தடவைதான் முதன் முதலாக இந்த முறைமை நடைமுறைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.





www.puthusudar.lk



# நாமல் இறங்கியது ஏன்?





> **மஹிந்தவின் ஆட்சியில் குடும்ப வாதம், ஊழல், மோசடி தலை துக்கி இருக்காவிட்டால் மஹிந்தவின் கைகளில் தொடர்ச்சியாக ஆட்சி அதிகாரம் இருந்திருக்கும். அதை வைத்து இந்த முறை தேர்தலில் நாமல் இலகுவாக வெல்வது உறுதி.**

ஜனாதிபதி தேர்தல் களம் சூடு பிடித்துள்ளது.தேர்தல் அறிவிக்கப்பட்டதில் இருந்து இப்போதுவரை பல நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

சஜித் அணியின் கூட்டமைப்பு உருவாக்கம்,தயாசிறி தலைமையிலான சுதந்திர கட்சி சஜித்துக்கு ஆதரவு,90இற்கு மேற்பட்ட மொட்டு எம்பிக்கள் ரணிலுக்கு ஆதரவு,மொட்டின் வேட்பாளராக நாமல் ராஜபக்ச போட்டி உள்ளிட்ட பல நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.இன்னும் அதிகமான நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இடம்பெற்றுள்ள அந்த அரசியல் நிகழ்வுகளில் நாமல் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளமை முக்கியமான விடயமாகும்.

ஏனென்றால் ரணிலின் வெற்றிக்கு மொட்டின் ஆதரவு நிச்சயம் தேவை. அப்படியென்றால்தான் ரணிலால் இறுக்கமான போட்டி ஒன்றை சஜித்,அனுர ஆகிய வேட்பாளர்களுக்கு எதிராகக் கொடுக்க முடியும்.

எப்படியாவது இழுத்தடித்து மொட்டு கட்சி இறுதியில் ரணிலுக்கே ஆதரவு வழங்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

அதுமட்டுமல்ல,அவர்கள் ரணிலுக்கு ஆதரவு வழங்காவிட்டால் தம்மிக்க பெரேராவையே வேட்பாளராக நிறுத்துவார்கள் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

இந்த இரண்டு எதிர்பார்ப்புகளையும் பொய்யாக்கிவிட்டு இப்போது நாமல் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார்.

நாமலை வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்ற கோசம் நீண்ட நாட்களாக கட்சிக்குள் முன்வைக்கப்பட்டு வந்தது.மொட்டு கட்சியின் இளம் எம்பிக்களே இந்தக் கோசத்தை முன்வைத்து வந்தனர்.

ஏன் நாமல் வேட்பாளராக நிறுத்தப்பட்டார்? அவரால் இன்றைய சூழலில் வெல்ல முடியுமா? ரணிலுக்கு ஆதரவு வழங்கி இருந்தால் முழு மூச்சாக நின்று போராடி வென்றிருக்கலாமே என்றெல்லாம் அரசியல் அரங்கில் பேசப்படுகிறது.

மொட்டு ரணிலுக்கு ஆதரவு வழங்கியும்கூட ரணிலால் வெல்ல முடியாத சூழ்நிலை இருப்பதாலேயே நாமலை கட்சியின் வேட்பாளராக நிறுத்துவதற்கு மஹிந்த ராஜபக்ச முடிவெடுத்தார் என்று சொல்லப்படுகிறது.

எப்படியோ தோல்வியடையத்தான் போகிறோம்.அதைவிட நாமலை இறக்கினால் அவரை அரசியலில் கொஞ்சம் பதப்படுத்தி எடுக்கலாம் என்ற நோக்கிலேயே மஹிந்த இந்த முடிவை எடுத்திருக்கிறார்.

ஆனால்,நாமல் எதிர்கொள்ளும் முதலாவது தேர்தலே தோல்வி காணப்போகும் தேர்தல் என்பதுதான் உண்மை.அவரை எடுத்த எடுப்பில் வெல்ல வைப்பதற்கான வாய்ப்பை முதலாவதாகத் தவறவிட்டவர் மஹிந்ததான்.

இரண்டாவது தடவை கோத்தாவால்.இல்லாமல் போனது.

மஹிந்த 2005இல் முதல் தடவையாக ஜனாதிபதியாகத் தெரிவாகிறார்.2010இல் அவர் இரண்டாவது தடவையும் ஜனாதிபதியாகிறார்.

அப்போதே அவர் தீர்மானித்துவிட்டார் இந்த அரசியல் அதிகமானது குடும்ப சொத்தாக மாற வேண்டும் என்று.

அதற்கு ஏற்ப,தனக்குப் பின் இந்த அதிகாரத்தை தனது வாரிசு கையில் வைத்திருக்க வேண்டும் என்று மஹிந்த முடிவெடுக்கிறார்.

அதற்கு அவர் தெரிவு செய்தது தனது மூத்த மகன் நாமல் ராஜபக்சவை.2010 நாடாளுமன்றத் தேர்தலில் ஹம்பாந்தோட்டையில் நாமலை களமிறக்குகிறார் மஹிந்த.வெற்றியும் பெறுகிறார் நாமல்.

நாமல் இப்போதுதான் நாடாளுமன்றத்துக்கு நுழைந்துள்ளார். அரசியல் அனுபவமில்லை.அந்த அனுபவமும் ஜனாதிபதியாவதற்கு பொருத்தமான பக்குவமான வயதும் வரும்வரைக்கும் ஆட்சி அதிகாரத்தை தொடர்ச்சியாக தன் கையில் வைத்திருக்க வேண்டும் என்று முடிவெடுக்கிறார் மஹிந்த.

அதற்காகவே அரசமைப்பின் 18ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்து ஒருவர் இரண்டு தடவைக்குமேல் ஜனாதிபதியாக இருக்க முடியாது என்ற வாக்கியத்தை அரசமைப்பில் இருந்து தூக்குகிறார்.

இப்போது ஒருவர் எத்தனை தடவையும் ஜனாதிபதியாக இருக்க முடியும் என்று அரசமைப்பு அனுமதிக்கிறது.

இந்த அனுமதியுடன் மூன்றாவது தடவையும் 2015 ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகிறார் மஹிந்த.

மஹிந்த அரசின் ஊழல்,குடும்ப ஆட்சி மற்றும் சிறுபான்மை மக்களுக்கு எதிரான இனவாதம் எல்லாம் சேர்ந்து மஹிந்தவைத் தோற்கடிக்கிறது.

2015இல் ஆட்சிக்கு வந்த அரசு அரசமைப்பில் ஏற்கனவே இருந்த ஒருவர் இரண்டு தடவைகளுக்கு மேல் ஜனாதிபதியாக இருக்க முடியாது என்ற வாக்கியத்தை மீண்டும் அரசமைப்பில் சேர்த்து சட்டமாக்குகிறது.

இதனால் மஹிந்த இனி போட்டியிடவே முடியாத நிலை ஏற்படுகிறது.

இருந்தாலும் பரவாயில்லை.2019 ஜனாதிபதி தேர்தலில் தனது குடும்பத்தில் வேறு ஒருவரை நிறுத்தி மீண்டும் ஆட்சியைப் பிடித்து தக்கவைத்தல். அப்படியே 2024 இல் நாமலை களமிறக்குதல் என்று முடிவெடுத்தார் மஹிந்த.

மஹிந்தவின் திட்டப்படி,2019 ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த தரப்பு ஆட்சியைப் பிடிக்கிறது.ஆனால்,கோத்தாவின் மோசமான ஆட்சியால் நாட்டின் பொருளாதாரம் சரிந்து இறுதியில் மக்கள் வீதிக்கு இறங்கி அவரை பதவியில் இருந்து விரட்ட வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதனால் உண்மையில் பாதிக்கப்பட்டது நாமலின் ஜனாதிபதி கனவுதான்.சரியான முறையில் கோத்தா ஆட்சியை நடத்தி இருந்தால் இந்தத் தேர்தலில் நாமல் வெற்றிபெறுவது பெரிய காரியமல்ல.

இப்போது தேர்தல் பெறுபேறுகளின் அடிப்படையில் நான்காம் இடத்துக்குத் தள்ளப்படக்கூடிய நிலையில்தான் நாமல் போட்டியிடுகிறார்.

தோல்வி நிச்சயம் என்பதைப் புரிந்து ஓர் அனுபவம்-அரசியல் பக்குவம் வர வேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காகத்தான் நாமல் போட்டியிடுகிறாரே தவிர வெற்றியைப் பெறுவதற்காக அல்ல.

மஹிந்தவின் ஆட்சியில் குடும்ப வாதம்,ஊழல், மோசடி தலை தூக்கி இருக்காவிட்டால் மஹிந்தவின் கைகளில் தொடர்ச்சியாக ஆட்சி அதிகாரம் இருந்திருக்கும்.அதை வைத்து இந்த முறை தேர்தலில் நாமல் இலகுவாக வெல்வது உறுதி.

அப்படி இல்லாவிட்டால் கோத்தா சரி நல்லாட்சி புரிந்திருந்தால் அதுகூட நாமலின் வெற்றிக்கு வழிவகுத்திருக்கும்.

ஆனால், இரண்டு வாய்ப்புகள் தவறவிடப்பட்ட நிலையில் களமிறங்கி இருக்கிறார் நாமல்.இதுதான் அரசியல்.

# அனுர

# பிரபல்யமானது இப்படித்தான்

இன்று எல்லோராலும் ஒரு வித்தியாசமான அரசியல்வாதியாக–ஹீரோவாகப் பார்க்கப்படும் ஜேவிபியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க பிரபல்யமாவதற்குக் காரணமாக அமைந்த ஒரு சம்பவம் இருக்கிறது.

அனுரவை டொப் கியரில் தூக்கியதே அந்தச் சம்பவம்தான்.அன்றிலிருந்து இன்றுவரை அவரது மவுசு கூடிக்கொண்டே போகிறது.

2007 ஆம் ஆண்டு.வடக்கில் போர் தொடங்கிய காலம்.ஜேவிபியில் இருந்து விமல் வீரவன்ச விலகி சில நாட்கள்தான்.

ஒரு நாள் காலை.கொதிகொள்கின்றன ஊடகங்கள்.



ஏன் தெரியுமா..???

அப்போதைய பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ச பார்த்த வேலையால்தான் அது.

எப்போதுமே இனவாதத்தோடு கிறுக்குத்தனமான வேலைகளை செய்பவர் அவர்.

அன்றும் அப்படியான வேலை ஒன்றுதான்.

கொழும்பு லொட்ஜ்களில் தங்கி இருந்த வட பகுதி தமிழ் மக்கள் சிலரை எதுவித காரணமும் இன்றி இரவோடு இரவாக பஸ்களில் ஏற்றி அவர்களின் ஊர்களுக்கு அனுப்புகிறார் கோத்தா.

பாதுகாப்பைப் பலப்படுத்துகிறாராம்.

விடிந்ததும் பரபரப்பாகிறது இந்த விடயம்.

நாடாளுமன்றில் பட்ஜட் விவாதம் நடந்துகொண்டிருக்கும் நேரம் அது.

இந்த விவகாரம் இன்று நாடாளுமன்றை சூடாக்கப்போகிறது என்று தெரியும்.

அன்று நாடாளுமன்ற ஊடகவியலாளர் நான்.

குறித்த நேரத்தில் வழமைபோல் எங்களது ஆசனங்களில் –ஊடகவியலாளர்கள் பகுதியில் போய் அமர்ந்துகொண்டோம்.

ஆர்வத்தோடு.., நடக்கப்போகும் சம்பவத்தை எதிர்பார்த்து...

சபையின் தினப்பணி முடிய வெடிக்கிறது சபை.

இந்தப் பிரச்சினையை முதலில் கிளப்புகிறார் ஐக்கிய தேசிய கட்சியின் எம்பி மகேஸ்வரன்.

வழமைக்கு மாறான ஆக்ரோஷம்.

சத்தம் போடுகிறார். சட்டையைக் கழற்றி வீசி–வெற்றுடலுடன் நின்று...

சூடு பிடிக்கிறது சபை.அந்த ஆக்ரோஷத்தோடு...

எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒரே நிலைப்பாட்டில்...

எல்லோருமே கோத்தாவின் செயலுக்கு எதிராக...

உரையாற்றுகிறார்கள் ஒவ்வொரு கட்சிகளின் தலைவர்களும்.கண்டனங்களை முன்வைத்து...

அந்த வகையில் ஜேவிபியும்...

ஜேவிபியின் நாடாளுமன்றத் குழுத் தலைவராக அனுர குமார திஸாநாயக்க...

அப்பதவிக்கு நியமிக்கப்பட்டு சில நாட்கள்தான்.

முதலில் நாடாளுமன்றத் குழுத் தலைவராக இருந்தவர் விமல் வீரவன்ச.

அவர் கட்சியில் இருந்து விலகியதும் அப்பதவிக்கு நியமிக்கப்படுகிறார் அனுர.

அனுர என்பவர் யார்..எப்படிப்பட்ட திறமைசாலி என்பதை முழு நாடுமே அறிந்துகொண்டது அன்றுதான்.

கோத்தாவின் அந்த செயலுக்கு எதிராக–அந்த அப்பாவி தமிழ் மக்களுக்கு ஆதரவாக அனுர பேசிய பேச்சால் சபை முழுவதுமே வியப்பு. எல்லோர் முகங்களிலும் வியப்பு. சபையில் ஒரே அமைதி.

நாங்கள்கூட செய்தி எழுதுவதை சற்று நிறுத்திவிட்டு அவரது பேச்சிலேயே மெய்மறந்து கிடந்தோம்..

இதற்கு முன் அனுரவிடம் இருந்து அப்படியொரு பேச்சைக் கேட்டதே இல்லை.

அன்றைய காலத்தில் அரசின் பிரதம கொரடா ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளே.

அனுரவின் பேச்சு முடிந்ததும் எழுந்து பேசிய ஜெயராஜ் முதலில் கேட்டது........

“ஜேவிபியா இப்படி பேசுவது...? நீங்கள் ஆரம்பத்தில் இருந்தே இப்படி பேசியிருந்தால் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்த்திருக்கலாமே” என்றார்.

அதற்கு அனுர வழங்கிய பதில் :

“நாங்கள் புலிகளுக்குத்தான் எதிரி. புலிகளை அழிக்கவேண்டும் என்றுதான் பேசுகிறோம்.தமிழர்களுக்கு எதிரான நிலைப்பாட்டில் நாங்கள் இல்லை. ஆனால்,நாங்கள் புலிகளுக்கு எதிராக பேசுகின்ற ஒவ்வொரு பேச்சையும் தமிழர்களுக்கு எதிரான பேச்சுக்கள்போல் காட்டிவிட்டீர்கள்” என்றார்.

அதுவும் உண்மைதான்.

அன்று ஜேவிபியின் தலைவர் சோமவன்ச அமரசிங்கவாக இருந்தாலும்,தலைவர்போல் செயற்பட்டவர் விமல் வீரவன்சதான்.

அவரது பேச்சைத் தவிர வேறு எவரின் பேச்சும் எடுபட்டதில்லை. விமலைவிட திறமையான அனுர முடக்கி வைக்கப்பட்டிருந்தார்.

விமலின் பேச்சுக்கள் எல்லாம் இனவாதம் நிறைந்ததாகவே இருக்கும். புலிகள் என்பது வேறு,தமிழர்கள் என்பது வேறு என்று அவரது பேச்சில் தெரியாது.

இதனால் ஜேவிபியை தமிழ் ஊடகங்களுக்குப் பிடிக்காது.

ஆனால், அதை உடைத்து வீசியது அனுரதான்.

தாம் யார்... தாம் எப்படிப்பட்ட கட்சி... தாம் எதைச் செய்து வருகிறோம் ..என்று தெளிவாக நாட்டுக்குப் புரிய வைத்தவர் அனுரதான்.அந்த நாடாளுமன்ற உரையின் ஊடாக...

அதன்பின் ஜேவிபியின் போக்கே மாறியது.

தமிழ் ஊடகங்கள் அதன்பின்தான் ஜேவிபியுடன் நெருங்குகிறது.

விமலின் காலத்தில் நாங்கள் யாரும் விமலுடன் தொடர்புகொள்வதில்லை. நாம் தொடர்புகொள்ளும் ஒரே நபர் விஜித ஹேரத் மட்டும்தான்.

அவர் மட்டும்தான் தமிழ் ஊடகங்களுடன் ஒட்டி உறவாடக்கூடியவர்.

பின்னர் விமல் அங்கிருந்து சென்றதும்–அனுர தலைவரானதும் எங்களது நெருக்கம் அதிகமானது.

இப்போது ஜேவிபியை இந்தளவு கொண்டுவந்து நிறுத்தியது அனுரதான்.

(ஊடகவியலாளர் எம்.ஐ முபாறக்)



# 250ஆவது செலான் பஹுசர நூலகம்



செலான் வங்கி தனது 250ஆவது செலான் பஹுசர நூலகத்தை கொழும்பு 14இல் உள்ள புனித அந்தோனியார் தமிழ் மகா வித்தியாலயத்தில் அண்மையில் திறந்து வைத்தது.
இது இலங்கை முழுவதும் எழுத்தறிவு மற்றும் கல்வியை மேம்படுத்தும் பணியில் குறிப்பிடத்தக்க மைல் கல்லைக் குறிக்கிறது.
11 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இம் முயற்சியானது மாற்றத் திற்கான சக்திவாய்ந்த கருவியாக எண்ணற்ற இலங்கை மாணவர்களின் வாழ்க்கையை மாற்றியமைத்து சமூக அபிவிருத்தி மற்றும் நிலையான வளர்ச்சியை ஊக்குவித்து வருகின்றது.
2013ஆம் ஆண்டு ஆரம்பிக்க ப்பட்ட செலான் பஹுசர நூலகத் திட்டம் போதுமான வளங்கள் மற்றும் உதவிகள் அற்ற , உதவிகள் மற்றும் ஆதாரங்கள் தேவைப்படும். பாடசாலைகளின் கல்வித் தேவைகளை நிவர்த்தி செய்யும் நோக்கில் உருவாக்கப்பட்டது.

# ஒலிம்பிக்கிற்கு காப்புறுதி அனுசரணை

Allianz — Worldwide Olympic and Paralympic Insurance Partner

இலங்கையின் முன்னணி காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றாகவும், Allianz SE இன் அங்கமாகவும் திகழ்ந்து வருகின்ற அலியான்ஸ் லங்கா, ஒலிம்பிக் மற்றும் பராலிம்பிக் போட்டிகளுக்கான உலகளாவிய காப்புறுதிக் பங்காளராக செயற்பட, பெருமையுடன் முன்வந்துள்ளது. தற்போது இடம்பெற்று வருகின்ற பரிஸ் 2024 போட்டிகளுடன், விளையாட்டு வீரர்கள் மீது அலியான்ஸ் காண்பிக்கும் அர்ப்பணிப்பு, உலகளாவிய, மகத்துவம், நட்பு, மற்றும் மரியாதை ஆகிய ஒலிம்பிக் மற்றும் பராலிம்பிக் விழுமியங்களை ஊக்குவிப்பதில் தனது உறுதிப்பாட்டையும் அது வெளிக்காண்பித்துள்ளது.
மக்களை ஐக்கியப்படுத்தி, நேர்மறை மாற்றத்தை முன்னெடுப்பதில் விளையாட்டுக்களின் வலிமை மீது தான் கொண்டுள்ள நம்பிக்கையை தொடர்ச்சியாக வெளிக்காண்பித்து, சர்வதேச விளையாட்டு நிகழ்வுகளுக்கு ஆதரவளிக்கும் தனது மரபினைக் கட்டியெழுப்பும் வகையில் 2024 பரிஸ் போட்டிக ளுடனான அலியான்ஸின் பங்களிப்பு காணப்படுகின்றது.

# இணைய வங்கிச் சேவை அறிமுகம்




இலங்கையில் மற்றுமொரு தனித்துவத்தை முதன் முதலாக அறிமுகப்படுத்தும் வகையில், வாடிக்கை யாளர்கள் தமது முற்கூட்டிய வருமான வரி சான்றிதழ்களை பதிவிறக்கம் செய்து கொள்வதற்கு அவர்க ளுக்கு இடமளிக்கின்ற தொரு புதியதொரு அம்சமாக, தனது இணைய வங்கிச்சேவை தளத்தை அறிமுகப்படுத்தி யுள்ளமை குறித்து DFCC வங்கி பெருமையுடன் அறிவித்துள்ளது.
எந்தவொரு கிளைக்கும் நேரடியாக செல்ல வேண்டிய சிரமத்தைப் போக்கி, வாடிக்கையாளர்களுக்கு 24 மணி நேர அணுகலை வழங்குவதுடன், பசுமையை நோக்கிய தீர்வையும் ஊக்குவிக்கின்றது.
எமது வாடிக்கையாளர்கள் மீது நாம் காண்பிக்கும் ஓயாத அர்ப்பணிப்பின் உந்து சக்தியால் இது அறிமுகப் படுத்தப்பட்டுள்ளதுடன், 2025 ஆம் ஆண்டளவில் மிகவும் வாடிக்கையாளரை மையப்படுத்திய மற்றும் டிஜிட்டல்ரீதியாக இயக்கப்படுகின்ற வங்கியாக மாற வேண்டும் என்ற DFCC வங்கியின் மூலோபாய குறிக் கோளுடனும் ஒன்றியுள்ளது.

# Swisstek உடன் சமரி அத்தபத்து

50 வருடங்களுக்கும் அதிக வரலாற்றைக் கொண்ட, இலங்கையின் கட்டுமானத் துறையில் முன்னோடியாக விளங்கும் Swisstek Ceylon PLC நிறுவனம், இலங்கை மகளிர் தேசிய கிரிக்கெட் அணியின் உத்வேகமான தலைவியும், உலகின் முன்னணி மகளிர் கிரிக்கெட் வீராங்கனை யுமான சமரி அத்தபத்துவுடன் ஒரு அற்புதமான பங்காளித்துவத்தை அறிவிப்பதில் பெருமிதம் கொள்கிறது.
இந்நிறுவனம் Tile Adhesive மற்றும் Tile Grout ஆகிய உற்பத்திகளில் சந்தையில் முன்னணியில் திகழ்வதோடு, அதன் சந்தைப் பிரிவில் SLS சான்றிதழைப் பெற்ற முதலாவது வர்த்தக நாமமாகவும் விளங்குகின்றது. இவை உயர் தரத்தைப் பேணுவதற்காக நிறுவனம் கொண்டுள்ள உறுதிப்பாட்டை எடுத்துக் காட்டுகிறது.



இலங்கையின் மீண்டுவரும் நிர்மாணத் துறையை வெற்றியை நோக்கி கொண்டு செல்வதற்கும், வாழ்விட ங்களில் நீண்ட தரம் மற்றும் ஆயுளில் கவனம் செலுத்தும் ஒரு நிறுவனம் எனும் வகையில் கட்டுமானம், புனரமைப்பு நடவடிக்கை களில் முக்கிய முடிவுகளை எடுப்பதிலான விடயங்களில் முன்னின்று ஈடுபடுவதில் ஆண், பெண் இருபாலர்களையும் வலுவூட்டுவதற்கும், ஆண்களை அதிகம் கொண்ட தொழில்துறையில் செல்வாக்கு கொண்ட பெண் ஒருவரைப் பயன்படுத்துவ தன் மூலம் இந்த முயற்சியில் துணிச்சலான நடவடிக்கையை நிறுவனம் எடுத்து வருகிறது.

# 10-வலுவான நிதிச் செயல்திறனை அறிக்கையிட்ட Sunshine

இலங்கையின் பன்முகப்படு த்தப்பட்ட நிறுவனங்க ளின் குழுமமான சன்ஷைன் ஹோல்டிங்ஸ், சவாலான பொருளாதார சூழ் நிலைமைகளுக்கு மத்தியிலும் வலுவான செயல்திறனைப் பதிவு செய்தது,
கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024/25 நிதியாண்டின் முதல் காலாண்டில் 6.5% அதிக வருவாய் வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளதுடன் சன்ஷைன் குழுமம் நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் (1QFY25) 14.2 பில்லியன் ரூபாய் ஒருங்கிணைந்த வருவாயைப் பதிவு செய்துள்ளது.
அவர்களின் வரிக்குப் பிந்தைய இலாபம் (PAT) கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 3.6% குறைந்து 1.4 பில்லியன் ஷரூபாயாக அமைந்திருந்தது.
நுகர்வோர் மற்றும் விவசாய



வணிகப் பிரிவுகளில் வருவாய் குறைந்தாலும், ஹெல்த்கெயார் பிரிவில் வலுவான செயல்திறன் இந்த வருவாய் வளர்ச்சிக்கு வழிவகுத்தமை குறிப்பிடத்தக்கது.
மொத்த வருவாயில் 53.1% கணக்கைக் கொண்ட குழுவின் இந்த உயர் வளர்ச்சிக்கு ஹெல்த்கெயார் பிரிவு அதிக பங்களிப்பை செய்திருந்தது.
இதற்கிடையில், குழுமத்தின் மொத்த வருவாயில் நுகர்வோர் பிரிவு 32.4% மற்றும் விவசாய வணிகப் பிரிவு 14.5ஐ பங்களித்தது.

# Neptune Recyclers இற்கு விருது





மீள்சுழற்சி தொடர்பான கழிவு முகாமைத்துவத்தில் இலங்கையின் முன்னணி நிறுவனமாக திகழும் **Neptune Recyclers** நிறுவனம், அண்மையில் இடம்பெற்ற 2024 ஜனாதிபதி சுற்றாடல் விருது நிகழ்வில் **'Solid Waste Recovery/ Recycling'** (திண்மக்கழிவு மீட்பு/ மீள்சுழற்சி) பிரிவில் வெண்கல விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. மத்திய சுற்றாடல் அதிகார சபையினால், 2024 ஜூன் 28 ஆம் திகதி, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) இடம்பெற்ற இந்த பெருமைக்குரிய நிகழ்வு, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பங்கேற்புடன் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் **Neptune Recyclers** நிறுவனத்தின் நிர்வாக பணிப்பாளர் அப்துல்லாஹ் காசிம், **Neptune Recyclers** நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் ரிஷான் ஜௌபர், **Neptune Recyclers** நிறுவனத்தின் பிரதம செயற்பாட்டு அதிகாரி பஸ்லீன் மஜீத் ஆகியோர் நிறுவனத்தின் சார்பில் கலந்துகொண்டு விருதைப் பெற்றிருந்ததோடு, நிறுவனத்தின் விசேடத்துவம் மற்றும் சுற்றுச் சூழலுக்கான அதன் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்தி யிருந்தனர்.

# மீண்டும் Chirpy Chips




இலங்கையின் நீண்ட கால வரலாற்றைக் கொண்ட தின்பண்ட உற்பத்தியாளரான ருளறயவவந **confectionery Works Pvt Ltd.** நிறுவனம், 68 ஆண்டுகளுக்கும் மேலாக உயர்தர தின்பண்டங்கள், இனிப்புகள் மற்றும் சிற்றுண்டி உணவுகளை வழங்கி வருகிறது.

அந்த வகையில் அனைவரதும் அபிமானம் பெற்ற உருளைக் கிழங்கு நொறுக்குத் தின்பண்டமான **Chirpy Chips** தயாரிப்பை மாற்றங்களுடன் மீள அறிமுகப்படுத்துவதில் நிறுவனம் மகிழ்ச்சி அடைகிறது.

வேடிக்கை நிறைந்த இந்த சிற்றுண்டியானது, தூய உருளைக்கிழங்கைப் பயன்படுத்தி நுணுக்கமாகத் தயாரிக்கப்படுவதோடு, ஒவ்வொரு கடியிலும் 100% உண்மையான உணவின் பெறுமதியை உறுதி யளிக்கிறது.

**Chirpy Chips** முதன்முதலில் 1994 இல் சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் அவ்வேளையில் நாட்டிற்கு உயர்தர உருளைக் கிழங்கை இறக்குமதி செய்வதில் ஏற்படுத்தப்பட்ட கட்டுப்பாடு காரணமான அரசாங்கக் கொள்கைகள் காரணமாக அது இடைநிறுத்தப்பட்டது.

இது பசியை போக்குவதோடு மட்டுமல்லாமல், முதல் கடி முதல் நுகர்வோரை இயற்கையான பொருட்களின் சுவைக்குள் மூழ்கடிக்கும் வகையில் வடிவமைக்க ப்பட்டுள்ளது.

# சமபோஷ பாடசாலை விளையாட்டுப் போட்டி




**CBL** நிறுவனத்தின் உப நிறுவdkhd **Plenty Foods (Pvt) Limited** நிறுவனத்தின் பிரதான தயாரிப்பான இந்நாட்டின் பிரபலமான தானிய உணவான சமபோஷ வின் ஊட்டமளிப்பில் '2024 சமபோஷ பாடசாலை விளையாட்டுப் போட்டி' ஓகஸ்ட் மாதம் 21ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இவ்வருட விளையாட்டுப் போட்டிகள் வடமத்தி, வடமேல், கிழக்கு, ஊவா மற்றும் தெற்கு ஆகிய ஐந்து மாகாணங்களை மையமாகக் கொண்டு நடத்தப்படவுள்ளன. சமபோஷவின் அனுசரணையுடன் மாகாணக் கல்வி அலுவலகங்களுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த விளையாட்டுப் போட்டி 5 மாகாணங்களிலும் தனித்தனியான விளையாட்டுப் போட்டிகளாக ஓகஸ்ட் மாதம் முதல் செப்டெம்பர் 13ஆம் திகதி வரை நடத்தப்படவுள்ளது.

இதில் இடம்பெறவுள்ள 70ற்கும் அதிகமான போட்டிகளில் 2000ற்கும் அதிகமான பாடசாலைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி 18,000ற்கும் அதிகமான வீர வீராங்கனைகள் பங்கெடுக்கவுள்ளனர்.

வெற்றிபெறும் பாடசாலைகள் மற்றும் வீர வீராங்கனைகளுக்கு, பதக்கங்கள், கேடயங்கள், சான்றிதழ்களை வழங்க மாகாணக் கல்வித் திணைக களத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த விளையாட்டுப் போட்டி தொடர்பில் கருத்துத் தெரிவித்த கல்வி அமைச்சின் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி மற்றும் விளையாட்டு) திரு. அதுல விஜயவர்தன குறிப்பிடுகையில், "பாடசாலை மாணவர்களின் திறமைகளை அதிகரித்து அவர்களின் உடல் மற்றும் உள வலிமையை மேம்படுத்துவதற்கும், அவர்களின் திறமைகளை தேசிய மட்டத்திற்குக் கொண்டு செல்வதற்குத் தேவையான பலத்தை வழங்குவதற்கு **CBL** சமபோஷ வழங்கும் உயர்ந்த ஒத்துழைப்பை நாம் மதிக்கின்றோம்" என்றார்.

இதன் முதலாவது விளையாட்டுப் போட்டியான ஊவா மாகாண விளையாட்டுப் போட்டி பதுளை வின்சன்ட் டயஸ் விளையாட்டு மைதானத்தில் ஓகஸ்ட் மாதம் 21ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை நடைபெற விருப்புதுடன், ஊவா மாகாணத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி மற்றும் விளையாட்டு) திரு.எச். ஜி. சன்ன கருணாசேன இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், "அடிமட்டத்திலிருந்து தேசிய மட்டத்திற்கு வருவதற்கு முயற்சிக்கும் மாணவர்களை உயர்ந்த இடத்திற்குக் கொண்டுசெல்ல எமக்கு அனுசரணை வழங்கி இந்த விளையாட்டுப் போட்டியை வெற்றியைநோக்கிக் கொண்டு செல்ல சமபோஷவே முதன் முதலில் முன்வந்தது" என்றார்.

# பிளாஸ்டிக் கழிவு சேகரிப்பை துரிதப்படுத்தும் Hemas



வேகமாக நுகரப்படும் பாவனையாளர் பொருட்கள் துறையில் முன்னோடியாக விளங்கும் சுற்றாடல் நிலைபேறான தன்மையில் ஆர்வமுள்ள **Hemas Consumer Brands**, எதிர்கால சந்ததியினருக்கு பாதுகாப்பான, மாசடைவுகள் அற்ற நாளைய தினத்திற்காக பிளாஸ்டிக் வெளியீட்டை குறைப்பதற்கான முயற்சிகளை துரிதப்படுத்துகின்றது. 2030ஆம் ஆண்டளவில் 100% முழுமையான பிளாஸ்டிக் சேகரிப்பு மற்றும் மீள்சுழற்சியை அடைவதற்கான தனது பயணத்தில், இலங்கையின் மிகப்பெரிய பிளாஸ்டிக் மீள்சுழற்சி நிறுவனமான **Eco Spindles (Pvt) Ltd.** உடன் ஒரு முக்கிய பங்காளித்துவத்தை ஏற்படுத்தியுள்ள **Hemas Consumer Brands** நிறுவனம், காலியில் **Baling** தளத்தில் முதலீடு செய்கிறது.

இது எதிர்வரும் 3 வருடங்களுக்குள் 360,000 கிலோகிராம் (360 மெட்ரிக் தொன்) பிளாஸ்டிக்கை சேகரிக்கும் இலக்கைக் கொண்டுள்ளது.

# AIA சிறிலங்காவிற்கு விருது




இலங்கையின் முன்னணி காப்பீட்டு நிறுவனங்களில் ஒன்றாக அடையாளம் காணப்படும் **AIA** ஸ்ரீலங்கா, 'எல்.எம்.டி மற்றும் நீல்சன்' காப்பீட்டு நிறுவனங்களில் மிகவும் மதிக்கப்படும் நிறுவனமாகவும், 'எல். எம்.டி மற்றும் பெப்பர் கியூப் கன்சல்டன்ட்ஸ்' மூலம் 'கார்ப்பரேட் பிராண்ட்ஸ்' பிரிவில் மிகவும் அன்பளிக்கப்பட்ட நிறுவனமாகவும் உள்ளது.

மரியாதையான ஹாஷ்டேக் ஆசியா விருதுகள் 2024 இல், **AIA** ஸ்ரீலங்காவின் 'பொசன் பாதுகாப்பு திட்டம்' பிரச்சாரம், 'சிறந்த ஒருங்கிணைக்கப்பட்ட சமூக ஊடக பிரச்சாரம்' பிரிவில் இறுதிப் பட்டியலுக்கு தேர்வாக, 'சிறந்த சமூக ஊடக பிரச்சாரம்: பேஸ்புக்' பிரிவில் வெள்ளி விருதைப் பெற்றது. இது, இலங்கையிலிருந்து முதல் முறையாக ஒரு பிராண்டு இறுதிப் பட்டியலில் இடம்பிடித்து, விருதைப் பெற்றதாகும். இதன் மூலம், **AIA** இலங்கை, பிராந்திய அளவிலான சமூக ஊடக சந்தைப்படுத்தலுக்கான முன்னணி நிறுவனமாக தனது நிலையை உறுதிப்படுத்தியுள்ளது.

# குருதி அழுத்த கண்காணிப்பு கருவிகள் அன்பளிப்பு




**Terumo Corporation** அதன் விநியோக பங்காளரான ஹேமாஸ் சேர்ஜிகல் அன்ட் டயக்னொஸ்டிக்ஸ் (பிரைவட்) லிமிடெட் உடன் இணைந்து, **Nissei DS-11** குருதி அழுத்த கண்காணிப்பு கருவிகளை இலங்கை இதய நோயியல் வைத்தியர் நிறுவகத்துக்கு அன்பளிப்பு செய்துள்ளதாக அறிவித்துள்ளது.

புத்தாக்கமான மருத்துவ தீர்வுகளினூடாக, சமூகங்களுக்கு வலுவூட்டல் மற்றும் இருதய சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான அர்ப்பணிப்பு போன்றவற்றை இந்த நடவடிக்கை எடுத்துக் காட்டியுள்ளது.

புகழ்பெற்ற இருதய சிகிச்சை நிபுணரான வைத்தியர். டானியா பெரேராவினால் இந்தத் திட்டம் வழிநடத்தப்பட்டதுடன், இலங்கையில் இருதய நோய்கள் மற்றும் பக்கவாதம் போன்றவற்றுக்கு எதிரான போராட்டத்தின் முக்கிய மைல்கல்லாகவும் அமைந்துள்ளது.

# Pegasus Reef இன் உற்சாக போட்டி






**Pegasus Reef** இன் நிகழ்ச்சி உற்சாகமான விளையாட்டுப் போட்டிகளுடன் விழா தொடங்கியது. பங்கேற்பாளர்கள் டேக் ரக்பியில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர், உற்சாகங்கள் போர் மூட்டிட, கடற்கரை கரப்பந்து விளையாட்டில் எதிர்த்துப் போராடினர்.

அதிகமானோர் குறிப்பிடத்தக்க பணப் பரிசுகளுடன், அணிகள் வெற்றிக்காக போட்டியிட்டதால் உற்சாகமான சூழ்நிலையை உருவாக்கியது.

விளையாட்டுப் போட்டிகளைத் தொடர்ந்து, கடற்கரையோரம் அமைக்கப்பட்ட பலவகையான உணவு விற்பனையகங்கள் கவனத்தை ஈர்த்தன.

ஒவ்வொருவரின் நாவும் திருப்தி அடையும் வகையிலான, புதிய கடல் உணவுகள் முதல் சர்வதேச உணவு வகைகள் வரையிலான சமையல் தெரிவுகள் பங்கேற்பாளர்களுக்கு விருந்தளித்தன.

# மூன்று மெத்தைகள் அறிமுகம்




இலங்கையின் மெத்தைகள் துறையில் முன்னணி வர்த்தக நாமமான ஆர்பிகோ, பொலியுர்தீன் துறையில் கொண்டுள்ள சிறந்த சாதனைகளை கொண்டாடும் வகையில் விசேட நிகழ்வொன்றை ஏற்பாடு செய்திருந்தது.

அண்மையில் கொழும்பு மொனார்க் இம்பீரியல் ஹோட்டலில் முன்னெடுக்கப்பட்ட இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வை, ஆர்பிகோ மெட்ரஸ் ஏற்பாடு செய்திருந்ததுடன், தெரிவு செய்யப்பட்ட 150 விற்பனையாளர்களின் முயற்சிகள் கௌரவிக்கப்பட்டிருந்தன.

ஆர்பிகோ உள்நாட்டு உற்பத்தி மற்றும் விநியோகத்துறை நாட்காட்டியின் முக்கிய இடத்தைப் பெற்றுள்ள இந்த விற்பனையாளர் விருதுகள் வழங்கும் நிகழ்வில், நிறுவனத்தின் விற்பனை இலக்குகளை எய்துவதில் சிறந்த பங்களிப்பை வழங்கியிருந்த 150க்கும் அதிகமான விற்பனையாளர்கள் பங்கேற்றிருந்தனர்.